**<u>20–வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 03.</u>**

தேதி 03.04.2025

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | – | C.C.No. 2768/2017 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா.1 |
| பெயர் | – | மீனாட்சி. |
| தந்தை பெயர் | – | |
| முகவரி | – | |
| வயது | – | |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 03.04.2025 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>நேரம்</u> :** 11.20 மணி.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் ஸ்ரீசைத்தன்யா டெக்னோ பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுகிறேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் திருமாணமன பின்னர் மாமியார் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 18 ஆண்டுகள் ஆகிறது. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். ஜெயந்தி என்பவர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. ஜெயந்தியின் கணவர் பெயர் வாசன் ஆகும். நான் முதல் விசாரணையில் எனது தாயார் பல தவணைகளில் ஒன்பது இலட்சம் ரூபாய் எதிரிக்கு கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். முதலில் ஐந்து இலட்சம் ரூபாய் வங்கியின் மூலமாக செய்யப்பட்டது. பின்னர் நான்கு இலட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்துள்ளார். மேற்படி விவரத்தினை புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2) நான்கு இலட்சம் ரூபாய் ரொக்கப் பணத்தை எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டது என்று புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த காலக்கட்டத்தில் எதிரி என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்று எனக்குத் தெரியாது. புகாரில் கடனுச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அது

ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி கடனுக்கான ஆவணங்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டுதான் எதிரி காசோலை வழங்கினார். மேற்படி விவரத்தினை புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் இல்லத்தரசியாக இருந்தார். அவர் அவருடைய சேமிப்பு மற்றும் நகைகளை அடமானம் வைத்து மேற்படி தொகைகளை எதிரிக்க கொடுத்திருந்தார். சேமிப்பிலிருந்து மேற்படி தொகை கொடுத்ததாக புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நகை சொத்து கடன் பெற்றதற்கு ஆவணங்கள் சமரப்பிக்க முடியுமா என்றால் வங்கி கணக்கு விவரங்கள் சமர்ப்பிக்க முடியும்.

3) ஒன்பது இலட்சம் பணம் வழங்க புகார்தாரர் தகுதி படைத்தவர் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி டிராவல்ஸ் நடத்தியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். காசோலையில் பாரதி டிராவல்ஸ்க்காக அதிகாரப்பூர்வ கையொப்பதாரராக எதிரி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும், அதன் உரிமையாளருக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரியை குறிப்பிடும் பொழுது தனிப்பட்ட முறையில் ஜெயந்தி என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்றாலும், நிறுவனத்தின் பெயர் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கானது உரிய சட்டத்தின் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பும் சரியான நபருக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல.

4) என்னுடைய எதிரியை தெரிந்தவர் என்பதால் அவருடைய குடும்ப நலன் கருதி கடன் வழங்கினார். மேற்படி விவரத்தை புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரில் பல முறை பணம் கொடுத்ததாக சொல்லப்படுவது இரண்டிற்கும் மேற்பட்ட தவணைகள் என்றால் சரிதான். கடைசியாக எந்தத் தேதியில் பணம் கொடுக்கபட்டது என்பது குறித்து தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். முதல் முறை கொடுத்த பணம் திருப்பப்படாத நிலையில், பலமுறை மீண்டும் கடன் கொடுத்ததாக கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. காசோலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதும், கையொப்பமிட்டுள்ளது வெவ்வேறாக இருக்கிறது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. ஞானசேகர் என்பவர் எனது தாய் மாமா ஆவார். பரந்தாமன் என்பவரும் எனது மாமா ஆவார், அவர் என்னுடைய தாய்

மாமா பத்மநாபன் என்பவருடைய மகன் ஆவார்.

5) எதிரியின் கணவர் என்ன வேலை செய்து வந்தார் என்று எனக்குத் தெரியாது. எதிரியின் கணவர் வாசன் என்பவர் நடத்தி வந்த உணவகத்தில் எனது தாயாரும் மேற்படி ஞானசேகர் மற்றும் பரந்தாமன் ஆகியோர்கள் வேலை செய்து வந்தனர் என்றால் சரியல்ல. மேற்படி உணவகத்தில் பங்குதாரராக வேண்டுமென்று கேட்டதால் மேற்படி மூவரையும் வாசன் பணியைவிட்டு நிறுத்திவிட்டார் என்றாலும், அதனால் காழ்ப்புணர்ச்சியால் வாசன் என்பவர் எதிரிக்கு சொந்தமான வாகனத்தில் இருக்கையின் கீழ் இருக்கும் அறையில் காசோலைகள் வைத்திருந்த பொழுது அசோகா உணவகம் அருகே மேற்படி வாகனத்தை நிறுத்தியிருந்த போது, அது காணாமல் போனது என்றாலும், அதிலிருந்த ஆவணங்களை எதிரி தவறாக பயன்படுத்தியுள்ளார் என்றாலும் சரியல்ல. வாகனம் காணாமல் போனது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

6) மேற்படி காசோலைகளை எடுத்து மேற்படி மூவரும் மொத்தம் எண்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரம் ரூபாய்க்கு வழக்கு செய்துள்ளனர் என்றால் சரியல்ல. அடகு வைத்து வட்டிக்கு பணம் பெற்று, வட்டியில்லாமல் எதிரிக்கு பணம் தரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலை மேற்படி தொகைக்கு கொடுக்கப்பட்டதல்ல என்றாலும், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு விவரங்கள் தெரியாததால் முன்னுப்பின் முரணாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

20–வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை–03.